ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

நம்மாழ்வார் அருளிச்செய்த திருவாய்மொழி

# 6.7 – உண்ணுஞ்சோறு

*This document has been prepared by*

*Sunder Kidāmbi*

*with the blessings of*

ஸ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

*His Holiness  śrīmad āṇḍavan śrīraṅgam*

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக₃மாந்தமஹாதே₃ஶிகாய நம:

# 6.7 – உண்ணுஞ்சோறு

‡ உண்ணும் சோறு பருகு நீர் ⋆
தின்னும் வெற்றிலையும் எல்லாம் கண்ணன் ⋆
எம் பெருமான் என்றென்றே ⋆
கண்கள் நீர் மல்கி ⋆
மண்ணினுள் அவன் சீர் ⋆
வளம் மிக்கவன் ஊர் வினவி ⋆
திண்ணம் என் இள மான் புகும் ஊர் ⋆
திருக்கோளூரே ‖ **6.7.1** ‖

ஊரும் நாடும் உலகமும் ⋆
தன்னைப் போல் அவனுடைய ⋆
பேரும் தார்களுமே பிதற்றக் ⋆
கற்பு வான் இடறி ⋆
சேரும் நல் வளம் சேர் ⋆
பழனத் திருக்கோளூர்க்கே ⋆
போரும் கொல் உரையீர் ⋆
கொடியேன் கொடி பூவைகளே ‖ **6.7.2** ‖

பூவை பைங்கிளிகள் ⋆
பந்து தூதை பூம் புட்டில்கள் ⋆
யாவையும் திருமால் ⋆
திருநாமங்களே கூவி எழும் ⋆
என் பாவை போய் இனித் ⋆

தண் பழனத் திருக்கோளூர்க்கே ⋆
கோவை வாய் துடிப்ப ⋆
மழைக் கண்ணோடென் செய்யும் கொலோ ॥ **6.7.3** ॥

கொல்லை என்பர் கொலோ ⋆
குணம் மிக்கனள் என்பர் கொலோ ⋆
சில்லை வாய்ப் பெண்டுகள் ⋆
அயற்சேரி உள்ளாரும் எல்லே ⋆
செல்வம் மல்கி அவன் கிடந்த ⋆
திருக்கோளூர்க்கே ⋆
மெல் இடை நுடங்க ⋆
இள மான் செல்ல மேவினளே ॥ **6.7.4** ॥

மேவி நைந்து நைந்து விளையாடல் உறாள் ⋆
என் சிறுத் தேவி போய் ⋆
இனித் தன் திருமால் ⋆
திருக்கோளூரில் ⋆
பூ இயல் பொழிலும் ⋆
தடமும் அவன் கோயிலும் கண்டு ⋆
ஆவி உள் குளிர ⋆
எங்ஙனே உகக்கும் கொல் இன்றே ॥ **6.7.5** ॥

இன்றெனக்குதவாதகன்ற ⋆
இள மான் இனிப் போய் ⋆
தென் திசைத் திலதம் அனைய ⋆
திருக்கோளூர்க்கே சென்று ⋆
தன் திருமால் திருக்கண்ணும் ⋆
செவ்வாயும் கண்டு ⋆

நின்று நின்று நையும் ⋆
நெடும் கண்கள் பனி மல்கவே ॥ **6.7.6** ॥

மல்கு நீர்க் கண்ணொடு ⋆
மையல் உற்ற மனத்தனளாய் ⋆
அல்லும் நன் பகலும் ⋆
நெடுமால் என்றழைத்தினிப் போய் ⋆
செல்வம் மல்கி அவன் கிடந்த ⋆
திருக்கோளூர்க்கே ⋆
ஒல்கி ஒல்கி நடந்து ⋆
எங்ஙனே புகும் கொல் ஓசிந்தே ॥ **6.7.7** ॥

ஓசிந்த நுண் இடை மேல் ⋆
கையை வைத்து நொந்து நொந்து ⋆
கசிந்த நெஞ்சினள் ஆய்க் ⋆
கண்ண நீர் துளும்பச் செல்லும் கொல் ⋆
ஓசிந்த ஒண் மலராள் கொழுநன் ⋆
திருக்கோளூர்க்கே ⋆
கசிந்த நெஞ்சினள் ஆய் ⋆
எம்மை நீத்த எம் காரிகையே ॥ **6.7.8** ॥

காரியம் நல்லனகள் அவை காணில் ⋆
என் கண்ணனுக்கென்று ⋆
ஈரியாய் இருப்பாள் ⋆
இதெல்லாம் கிடக்க இனிப் போய் ⋆
சேரி பல் பழி தூய் இரைப்பத் ⋆
திருக்கோளூர்க்கே ⋆

நேர் இழை நடந்தாள் ⋆
எம்மை ஒன்றும் நினைத்திலளே ॥ **6.7.9** ॥

நினைக்கிலேன் தெய்வங்காள் ⋆
நெடும் கண் இள மான் இனிப் போய் ⋆
அனைத்துலகும் உடைய ⋆
அரவிந்த லோசனனை ⋆
தினைத்தனையும் விடாள் ⋆
அவன் சேர் திருக்கோளூர்க்கே ⋆
மனைக்கு வான் பழியும் நினையாள் ⋆
செல்ல வைத்தனளே ॥ **6.7.10** ॥

‡ வைத்த மா நிதியாம் ⋆
மதுசூதனையே அலற்றி ⋆
கொத்தலர் பொழில் சூழ் ⋆
குருகூர்ச் சடகோபன் சொன்ன ⋆
பத்து நூற்றுள் இப்பத்து ⋆
அவன் சேர் திருக்கோளூர்க்கே ⋆
சித்தம் வைத்துரைப்பார் ⋆
திகழ் பொன் உலகாள்வாரே ॥ **6.7.11** ॥

அடிவரவு — உண்ணும் ஊரும் பூவை கொல்லை மேவி இன்று மல்கு
ஒசிந்த காரியம் நினைக்கிலன் வைத்த பொன்

உண்ணுஞ்சோறு முற்றிற்று

நம்மாழ்வார் திருவடிகளே சரணம்